# Economic Impact of Tourism Due to COVID -19 in 2020: A Case Study of Kandy District of Sri Lanka

M.L Shilfa Baanu[1], M.A.F Rashidha[2] & A.R.F Begum[3]

*[1]Department of Geography, South Eastern University of Sri Lanka.*

*[2]Department of Languages, South Eastern University of Sri Lanka.*

*[3]Department of Arabic language Senior lecturer in social sciences South Eastern University of Sri Lanka.*

*[1]shilfa5757@gmail.com, [2] rasidha.2527@gmail.com, [3]begumrahman@seu.ac.lk*

***ABSTRACT***

*Tourism is that the activity of people travelling and staying in palaces outside their usual environment for leisure business or other purpose. The tourism sector is one of the main exchanges earning sources of the Sri Lankan economy. Kandy is an iconic place of tourism in Sri Lanka. It is the last capital of the Sinhala kingdom. It's also is known as 'Mahanuwara' and has been identified as a world religious center since 1988. The main purpose of this research to spotlight the impact of COVID 19 within the tourism sector in the Kandy district and identify the potential activities to rebuild the affected agent. Further research compares differences with in the alleviation of the tour 2019 and 2020 because of the COVID – 19. This study descriptively utilized primary data. Apart from other cases, this pandemic has created immense consequences in political social and economic factors. especially effect tourism, which is an icon of Sri Lanka's economy is entirely dropped down. Tourism is rapidly growing investment point in Sri Lanka, where huge investment is take place. Even though the investment is very massive the planning, development and marketing is the key component of success in tourism zone enhancement. This study suggests that the tourism sector can be redeveloped by increasing the contribution to the public to organized management to provide credit assistance to encourage tourism investment.*

***Keywords**: COVOD-19, Dropped Down, Economic Factors, Investment, Impact, Tourism*

---

### *01. அறிமுகம்*

*ஒரு நாட்டிற்கோ, நகரத்திற்கோ, பிராந்தியத்திற்கோ வெளி நாட்டுப் பயணிகள் வருகை தருவது, தங்கிச் செல்வது போன்ற பொருளாதார நோக்கு உடைய அத்தனை செயற்டபாடுகளினதும் தொகுப்பே சுற்றுலாவாகும். (ஹெர்மன் விசுலாட், 1991). ஊலகளாவிய ரீதியில் வேகமாக வளர்ந்து வரும் மிகவும் முக்கியமான பொருளாதாரத் துறைகளில் சுற்றுலாத் துறையும் ஒன்று. 1950ல் 25 மில்லியனாக இருந்த சர்வதேச சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 2015ல் 1.2 பில்லியனாக அதிகரித்து தற்பொழுது அதைவிட வளர்ச்சியடைந்துள்ளது. 2016ம் ஆண்டில் 1.2 பில்லியன் சுற்றுலாப் பயணிகள் சர்வதேச எல்லைகளை கடந்துள்ளதாக கணிப்பீடகள் கூறுகின்றன. 2030ல்*


ISBN: 978-624-5736-55-3

இது *1.8* பில்லியன் சுற்றுலாப் பயணிகளாக மாறும் என எதிர்வு கூறப்படுகின்றது. *(*அதுல குணபால*, 2000)* உலக சுற்றுலா தினம் செப்டெம்பர் *27*ம் திகதியாகும். *1980*ம் ஆண்டு முதல் உலக சுற்றுலா தினம் அனுஷ்டிக்கப்படுகின்றது.

இலங்கையின் பொருளாதாரத்தை நிர்ணயிக்கும் முக்கிய துறைகளாக சுற்றுலாத்துறை, விவசாயம், தேயிலை, மற்றும் ஆடைகள் ஏற்றுமதி போன்றன உள்ளன. இலங்கையின் அதிக வருவாய் வரும் துறைகளில் சுற்றுலாத்துறை மிக முக்கியமான ஒன்று. அந்த வகையில் *2009* ம் ஆண்டு போர் முடிவிற்கு பிறகு சுற்றுலாத் துறையின் வளர்ச்சி அதிகரித்து வந்தது. *2014*ம் ஆண்டு முதல் *2018*ம் ஆண்டு வரை சுமார் *9.8* மில்லியன் சர்வதேச சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர். இதன் மூலம் இலங்கைக்கு கிடைத்த வருவாய் *1,547,807* மில்லியன் அமெரிக்க டொலர்களாகும். உள்நாட்டு உற்பத்தியின் அளவு ஏற்ற இறக்கம் கொண்டாலும், அந்த வருமானத்தை நாட்டுக்கு ஈட்டிக்கொடுப்பது சுற்றுலாத்துறை ஆகும். *(*தினகரனஇ ***April** 30,2019)**.* கீழ் காணப்படும் வரைபானது *2010*ம் ஆண்டு தொடக்கம் *2020*ம் ஆண்டு மார்ச் மாதம் வரையிலான காலப்பகுதியில் இலங்கைக்கு வருகை தந்த சுற்றுலா பயணிகளின் மொத்த எண்ணிக்கையை காட்டுகின்றது.





Fig. 6: Source: Sri Lankan tourism development authority annual statistical report.


*2009*ம் ஆண்டு போர் முடிவிற்கு பின்னர் படிப்படியாக வளர்ந்து வந்த சுற்றுலா துறையானது, கடந்த ஆண்டு இலங்கையில் ஏற்பட்ட ஈஸ்டர் தாக்குதல் காரணமாக சுற்றுலா துறை வீழ்ச்சியை நோக்கியதுடன் *2020*ம் ஆண்டு படிப்படியாக பழைய நிலைக்குத் திரும்புகையில் உலகளாவிய ரீதியில் ஏற்பட்ட கொவிட் தொற்றினால் மீண்டும் வீழ்ச்சியைக்கண்டுள்ளதை இவ்வரை படம் காட்டுகின்றது.

இலங்கையின் சுற்றுலாத்துறை தெற்கு, தென்கிழக்கில் பெரிதும் வளர்ந்துள்ளது. காலி, கண்டி, அநுராதபுரம், பொலன்னறுவை வரலாற்று சிறப்பு மிக்க இடங்கள், தேசிய பூங்காக்கள் மற்றும் பௌத்த விகாரைகள் முக்கிய ஈர்ப்பு பிரதேசங்களாக காணப்படுகின்றன.இலங்கையில் நிலவும் சீரான காலநிலை, இயற்கை எழில், கடற்கரைகள், வரலாற்று சிறப்புமிக்க இடங்கள், என்பன சுற்றுலாப் பயணிகளைப் பெரிதும் ஈர்க்கின்றது. சுற்றுலா மேற்கொள்வதற்கான உலகின் சிறந்த


ISBN: 978-624-5736-55-3

*நாடுகளின் வரிசையில் முதன்மையான நாடு என்ற அந்தஸ்த்தை UNESCO நிறுவனம் இலங்கைக்கு வழங்கியிருந்தது.*

*இலங்கையின் மத்திய மாகாணத்தின் தலைநகரமான கண்டி இயற்கை எழில் கொஞ்சும் மலைகளால் சூழப்பட்ட ஓர் பிரதேசமாகும். இது இலங்கையின் தலைநகரமான கொழும்பிலிருந்து 70 மைல் தொலைவில் உள்ளது. இலங்கை நாட்டின் கண்கவர் அழகிய இடங்களில் கண்டியும் ஒன்றாகும். ஆரம்ப காலங்களில் சிங்கள மன்னர்களின் கோட்டையாக இருந்தது. இலங்கைக்கு வரும் சுற்றுலா பயணிகள் அனைவரும் தவறவிடாத ஓர் நகரம் கண்டி. நாட்டின் பெரிய நகரங்களில் ஒன்றான இது தம்புல்ல, நுவரெலியா, பொலன்னறுவை, என் சுற்றுலா முக்கியத்துவம் வாய்;;ந்த இடங்களுக்கு அருகில் அமைந்திருந்தாலும் புகழ் பெற்ற தலதா மாளிகை எனப்படும். புத்தரின் புனித பல் வைக்கப்பட்டுள்ள பௌத்த ஆலயம், பேராதனை தாவரவியல் பூங்கா, ஹக்கல பூங்கா, உடவத்த வனம், ஹந்தான மலை, எம்பக்க தேவாலயம் போன்ற பிரசித்தி பெற்ற இடங்கள் இருப்பதால் ஆண்டு முழுவதுமே சுற்றுலாப் பயணிகள் குவியும் நகரம் இது. (பிபிசி தமிழ், 2017)*




*அந்த வகையில் 2020ம் ஆண்டு உலகளாவிய ரீதியில் ஏற்பட்ட ஓர் அசாதாரண தொற்று COVID 19 ஆகும். இதன் காரணமாக உலக நாடுகள் அனைத்தும் ஸ்தம்பிதம் அடைந்த நிலையில் காணப்பட்டு தற்போது அதிலிருந்து சிறிது சிறிதாக மீண்டு வருகின்றது. இவ்வாய்வானது, COVID 19 தொற்றின் காரணமாக இலங்கையில் கண்டி மாநகரில் சுற்றுலாத்துறையில் ஏற்படுத்திய பொருளாதார தாக்கங்களை ஆராய்வதோடு கடந்த வருடங்களுடன் ஒப்பீடு செய்வதாகும்.*

### *02.***ஆய்வுப்பிரதேசம்**

*இவ்வாய்வுக்கான ஆய்வுப்பிரதேசமாக காணப்படுவது இலங்கை மத்திய மாகாணத்தின் தலைநகரமான கண்டி மாவட்டமாகும். இப்பிரதேசமானது $7^{0} 15^{'}$ வட அகலாங்கிலும், $80^{0} 45^{'}$ தென் அகலாங்கிலும் அமைந்துள்ளது. இலங்கையின் மத்திய மாகாணத்தின் தலைநகரமான கண்டி சுமார் 1,940$Km^2$ சதுர பரப்பளவைக் கொண்டுள்ளதோடு 23$Km^2$ நீர் வளத்தையும் தன்னகத்தே கொண்டுள்ளது. கண்டி மாநகரம் சுமார் 1,369,899 பேர் சனத்தொகையைக் கொண்டுள்ளது. இங்கு சராசரி வெப்பநிலை $23^{0}c$ - $26^{0}c$ வரையிலும், மழை வீழ்ச்சி 79mm – 250mm வரையிலும் நிலவுகின்றது. கடல் மட்டத்திலிருந்து 1600mm உயரத்திலும் அமையப் பெற்றுள்ளது. (மாவட்ட செயலாளர் பிரிவு, 2019)*

### *03.* **ஆய்வுப்பிரச்சினை**

*இலங்கையின் மத்திய மாகாணத்தின் கண்டி மாநகரம் சுற்றுலா பயணிகளை ஈர்க்ககூடிய பிரதேசமாகும். உலகளாவிய ரீதியில் ஏற்பட்ட* ***COVID 19*** *தொற்றின் காரணமாக கண்டி நகரின் சுற்றுலா பிரதேசங்களுக்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளின் வீழ்ச்சியை ஒப்பீட செய்வதோடு, அது நாட்டின் பொருளாதாரத்தில் ஏற்படுத்திய வீழ்ச்சியும் இவ் ஆய்வினை மேற்கொள்ளத் தூண்டிய பிரச்சினையாகும்.*

### *04.* ஆய்வின் நோக்கம்

*இவ்வாய்வானது பின்வரும் நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ளது.*

**பிரதான நோக்கம்**

- *COVID 19 தொற்றின் காரணமாக இலங்கையில் கண்டி மாநகரில் சுற்றுலாத்துறையில் ஏற்பட்டுள்ள தாக்கங்களை ஆராய்வதாகும்.*

**துணை நோக்கம்**

- *கடந்த ஆண்டுகளிலும் **2020** இலும் கண்டி மாநகரில் சுற்றுலா பயணிகள் வருகை பற்றிய ஒப்பீடு.*
- *இலங்கையில் கண்டி மாநகரில் சுற்றுலாத்துறையில் தாக்கங்களினால் பொருளாதாரத்தில் ஏற்பட்டுள்ள தாக்கங்களை ஆராய்தல்.*

### *05.* தரவு சேகரிப்பும் ஆய்வு முறையியலும்

*ஆய்விற்கான முதலாம் நிலைத் தரவுகள் கட்டமைக்கப்பட்ட வினாக் கொத்து, நேர்காணல், சுற்றுலாப் பயணிகள் வழிகாட்டி ஒரு சிலரோடு கலந்துரையாடல் போன்ற சமூக விஞ்ஞான முறைகளைப் பயன்படுத்தி பெறப்பட்டுள்ளன. இதனால் கண்டி மாநகருக்கு 2010 தொடக்கம் 2020 வரை வருகை தந்த சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை கண்டறியப்பட்டு கொவிட் தொற்றின் விளைவுகளால் சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கையில் ஏற்பட்ட சரிவு அவதானிக்கப்பட்டது.*


*இரண்டாம் நிலைத் தரவுகள் என்பது ஆய்வுக்கு தேவையான தரவு ஏற்கனவே மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் மற்றும் வெளியீடுகளிலிருந்து பெற்றுக் கொள்வதாகும். இவ்வாய்வுக்கான இரண்டாம் நிலைத் தரவுகள் இலங்கை சுற்றுலாத்துறை புள்ளிவிபரவியல் திரட்டு, இணையத்தளம், முன்னைய ஆய்வரிக்கைகள், சஞ்சிகைகள், பத்திரிகைகள், மென்பொருள், கட்டுரைகள் மூலம் பெறப்பட்டன. சேகரிக்கப்பட்ட தரவுகளில் பண்பு சார் தரவுகள் விவரண முறையிலும் அளவு சார் தரவுகள் எளிய புள்ளி விபரவியல் முறையிலும் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன. ஆவசியமான சந்தர்ப்பங்களில் அட்டவணைகள், வரைபடங்கள் மற்றும் விளக்கப்படங்கள் மூலம் விளக்கப்பட்டுள்ளன. மேலும் தரவுகளை பகுப்பாய்வு செய்வதற்காக கணினி மென் பொருள்கள் பயன்படுத்திப பகுப்பாய்வு செய்யப்பட்டன.*

### *06.* பெறுபேறுகளும் கண்காணிப்பும்

*__2020__ம் ஆண்டு உலகளாவிய ரீதியில் மக்கள் மத்தியில் பெறும் அச்சத்தை உருவாக்கிய கொரோனா வைரஸானது சீனாவில் பரவத்தொடங்கி நூற்றுக்கு மேற்பட்ட நாடுகளில் பரவி பல்லாயிரக்கணக்கான உயிர்களைக் காவு கொண்டதுடன் உலக பொருளாதாரத்தையே புரட்டிப் போட்டுள்ளது என்றால் அது மிகையாகாது. கொரோனா தொற்றுக்குள்ளான நாடுகளின் பட்டியலில் இலங்கையும் விதிவிலக்கல்ல. இலங்கையில் கடந்த மார்ச் மாதம் 10ம் திகதி அன்று கொரோனா வைரஸ் தாக்கத்திற்கு உள்ளான ஒருவர் இணங்காணப்பட்டார். அவர் ஓர் சுற்றுலா*

*வழிகாட்டியாக செயற்பட்டதாலும் தெரிவிக்கப்பட்டது. சுற்றுலா வழிகாட்டி ஒருவருக்கு கொரோனா வைரஸ் தொற்றியதால் சுற்றுலா துறையினரிடையே அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. சுற்றுலா துறைக்கும் இது பெறும் சவாலாக காணப்பட்டது.*

*இதன் காரணமாக சுற்றுலாத்துறை மிகவும் மோசமாக பாதிக்கப்பட்டுள்ளது கடந்த வருடம் ஏப்ரல் மாதம் 21 ம் திகதியன்று உயிர்த்த ஞாயிறு தினத்தன்று நாட்டில் இடம் பெற்ற தொடர்க் குண்டு தாக்குதல்களால் நாட்டின் மொத்த பொருளாதாரமும் பாதிக்கப்பட்டிருந்தது. சுற்றுலாத்துறையும் பாரிய வீழ்ச்சியைக் கண்டிருந்தது. இந்நிலையிலிருந்து நாடு படிப்படியாக மீண்டு வந்து கொண்டிருந்த நிலையில் கொரோனா வைரஸ் மீண்டும் நாட்டின் பொருளாதாரத்தை புரட்டிப் போட்டுக்கொண்டிருக்கின்றது. அந்த வகையில் இலங்கையின் முக்கிய தொழிற்துறையாக காணப்படுகின்ற சுற்றுலாத்துறை கொரோனா வைரஸ் தாக்கத்தின் காரணமாக வீழ்ச்சி கண்டுள்ளது. இலங்கையின் சுற்றுலாத்துறையில் ஓர் பிரசித்தி பெற்ற இடமே கண்டி நகரமாகும். இலங்கையில் நிலவும் சீரான காலநிலை இயற்கை எழில், கடற்கரைகள், வரலாற்று சிறப்புமிக்க இடங்கள் என்பன ஒப்பீட்டளவில் சுற்றுலாப் பயணிகளைப் பெரிதும் ஈர்க்கின்றது. மேலும் கடந்த இரு ஆண்டுகளிலும் கண்டி நகரிற்கு வருகை தந்த சுற்றுலாப் பயணிகளின் மாதாந்த தரவுகள் பின்வருமாறு.*








***FIG. 7:SOURCE: SRI LANKAN TOURISM DEVELOPMENT AUTHORITY ANNUAL STATISTICAL REPORT.***

*இவ் வரைபினூடாக 2018, 2019ம் ஆண்டுகளில் கண்டி நகரிற்கு ஒவ்வொரு மாதமும் வருகை தந்த உள்நாட்டு, வெளிநாட்டு பயணிகளின் தரவு காட்டப்பட்டுள்ளது. 2018 ம் ஆண்டு ஒவ்வொரு மாதமும் வெளிநாட்டு பயணிகளின் எண்ணிக்கை உயர்மட்டத்தில் காணப்பட்ட அதேவேளை 2019ம் ஆண்டை ஒப்பிட்டு நோக்கும் போது ஏப்ரல், மே மாதங்களில் வெளிநாட்டு சுற்றுளா பயணிகளின் வருகை வீழ்ச்சி கண்டுள்ளது.*

*மேலும் இவ் ஆண்டின் இறுதி மாதங்களின் வெளிநாட்டுப் பயணிகளின் எண்ணிக்கையின் அதிகரிப்பு 2020ம் ஆண்டு முதல் இரு மாதங்களிலும் தொடர்ந்து செல்கையில் COVID 19 தாக்கத்தின்*

*காரணமாக பாரிய அளவிலான வீழ்ச்சியை சுற்றுலாத்துறை கண்டுள்ளது. 2020ம் ஆண்டு சுற்றுலா பயணிகளின் வருகை தொடர்பான தரவுகள் பின்வருமாறு.*




Fig. 8: Source: Sri Lankan tourism development authority annual statistical report.

*இவ் வரைபு, 2020 ம் ஆண்டில் முதல் மூன்று மாதங்களில் வருகை தந்த சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கையை காட்டுகின்றது. முதலிரு மாதங்களிலும் காணப்பட்ட பயணிகளின் எண்ணிக்கை மார்ச் மாதத்தில் திடீர் சரிவை எதிர் நோக்கி அதனைத் தொடர்ந்து வந்த மாதங்களில் சுற்றுலா பயணிகளின் வருகையின்மையைக் காட்டுகின்றது.*



**FIG. 9: FIELD DATA COLLECTION.**

*கண்டி நகரில் அதிகமான சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கக்கூடிய இடமாக ஸ்ரீ தலதா மாளிகை ஹக்கல பூங்கா, உடவத்த வனம், ஹந்தான மலை, எம்பக்க தேவாலயம் மற்றும் பேராதனை தாவரவியல் பூங்கா என்பன சிலவாகும். COVID 19 தாக்கத்தின் காரணமாக இவ் இடங்களில் சுற்றுலாத்துறையில் ஏற்பட்ட சரிவினை கடந்த ஆண்டுகளுடன் ஒப்பிட்டு நோக்கும் போது, 2019ம் ஆண்டில் ஈஸ்டர் தாக்குதல் ஏற்பட்டாலும் கூட அவ்வருடத்தில் சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை ஓரளவேனும் காணப்பட்டது. ஆனால் இவ்வருடம் COVID 19 தாக்கம் முதலிரு மாதங்களுக்கு பிறகு முற்றுமுழுதாக வீழ்ச்சியடைந்துள்ளது. இது பொருளாதாரத்தில் பாரிய சவாலை ஏற்படுத்தியுள்ளது. 2019ம் ஆண்டு கண்டி மாநகரிற்கு தந்த சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை இடங்களின் அடிப்படையில்,*


ISBN: 978-624-5736-55-3





**FIG. 10: SOURCE: SRI LANKAN TOURISM DEVELOPMENT AUTHORITY ANNUAL STATISTICAL REPORT.**

*ஸ்ரீ தலதா மாளிகை என்பது கண்டி நகரில் உள்ள புகழ்பெற்ற பௌத்த ஆலயமாகும். பௌத்த சமயத்தவர்களால் உயர்வாக மதிக்கப்படுகின்ற புத்தரின் பல் இங்கே வைக்கப்பட்டிருப்பதன் காரணமாக இது புனித தந்த தாது எனவும் அழைக்கப்படுகின்றது. 1592 - 1815 வரை இருந்த கண்டி ராச்சியத்தின் தலைநகரமாக கண்டி நகரமாக விளங்கியது. அதனை ஆண்டு வந்த அரசர்களின் அரண்மனை வளாகத்தின் உள்ளேயே இவ்வாலயமும் அமைந்துள்ளது. கண்டி தலதா மாளிகையின் சிறப்புக்கள் காரணமாக உலகின் பாரம்பரிய நகரம் கண்டி என யுனெஸ்கோவினால் அறிவிக்கப்பட்டுள்ளமை பெருமைக்குறிய விடயமாகும்.*

*இங்கு வருடாந்தம் இலட்சக்கணக்கான உள்நாட்டு வெளிநாட்டு பயணிகள் வருகை தருகின்றனர். 2019 ம் ஆண்டில் இங்கு வருகை தந்த சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை 18726 ஆகும். ஆனால் 2020 ம் ஆண்டு வெளிநாட்டு சுற்றுலா பயணிகளின் வருகை முழுமையாக முடக்கப்பட்டிருந்த அதேவேலை தனது சமய ஆராதனைகளுக்காக உள்நாட்டுப் பயணிகள் சிலரே சென்றுள்ளனர்.*

*அடுத்து கண்டி நகரில் பிரதிபலிக்க கூடிய, சுற்றுலாப் பயணிகளை கவரக்கூடிய முக்கிய இடம் பேராதனை தாவரவியல் பூங்காவாகும். ஆசியாவிலுள்ள மிக அழகிய தாவரவியல் பூங்காக்களில் இலங்கையின் மத்திய மலைநாடான கண்டியில் அமையப்பெற்றுள்ள பேராதனை தாவரவியல் பூங்காவும் ஒன்றாகும். 147 ஏக்கர் நிலப்பரப்பைக் கொண்ட விசாலமான தாவரவியல் பூங்கா என்பதுடன் 4000 க்கும் மேற்பட்ட தாவரயினங்களையும் இங்கு அதிகளவில் காணலாம். இது 1843ம் ஆண்டு நிறுவப்பட்டது. மேலும் 1912 ம் ஆண்டில் இப் பூங்காவானது, விவசாயத்துறை திணைக்களத்தின் கீழ் மீள நிறுவப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும். இவ்வழகிய விசாலமான பூங்காவினை பார்வையிட வரும் மக்களின் எண்ணிக்கை வருடத்திற்கு இரண்டு மில்லியனாக உள்ளது என கணக்கெடுப்பு ஒன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் 2020 ம் ஆண்டு இதுவரை காலமும் இங்கு வருகைதந்துள்ள சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை ஏனைய வருடங்களுடன் ஒப்பிடும் போது சரிவடைந்துள்ளமையை காணமுடியும்.*

*இவ்வாறு கண்டி நகரில் உள்ள பல சுற்றுலா தலங்களிலும் பயணிகளின் எண்ணிக்கை முற்றுமுழுதாக பாதிக்கப்பட்டது. COVID 19 தொற்றினை கட்டுப்படுத்துவதற்காகவும் தன் நாட்டை பாதுகாக்கும் நோக்கிலும் விமான நிலையங்கள் மூடவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டதனால் வெளிநாட்டவர்களின் வருகை தடை செய்யப்பட்டிருந்ததோடு உள்நாட்டவர்களுக்;கும் சுதந்திரமான முறையில் வெளி நடமாட்டங்களை மேற்கொள்ள முடியாமற் போனது. இதனால் மக்கள் உள ரீதியாக பாதிப்பிற்கு உள்ளாகி இருந்தனர்.மேலும் சுற்றுலாத் துறையோடு சார்ந்த தொழில்கள் மேற் கொள்பவர்கள் இதனால் பெரிதும் பாதிப்பிற்குள்ளானர்.*



*ஒரு நாட்டிலோ அல்லது பிரதேசத்திலோ அனர்த்தங்கள் ஏற்படும் போது ஏனைய உலக நாடுகளிலிருந்து உதவிகள் கிடைக்கின்றன. ஆனால் தொற்று நோய் தாக்கத்தின் பொருளாதார பரிமாணம் அவ்வாறானதல்ல. இது முழு உலத பொருளாதாரத்தையுமே ஸ்தம்பிதம் அடையச் செய்துள்ளது. இந்நிலைமை உலகளாவிய ரீதியில் எல்லோரையும் வீடுகளில் முடக்கியது. ஓர் சில வேலைகளை மாத்திரமே இணையத்தள சேவைகளை பயன்படுத்தி மேற்கொள்ள முடிந்தது. வுழவசாயம் கைத்தொழில் மற்றும் சுற்றுலா துறைகள் என்பன அவ்வாறில்லை. எனவே இதனால் அதிகமான பொருளாதார பாதிப்புக்கள் ஏற்பட்டன.*

- *குறைந்த வெளிநாட்டு ஒதுக்கம்*
- *பாரிய கடன் சுமை*
- *சமூக நல செலவீடுகள்*
- *அரச தொழில் முயற்சிகள்*
- *அரச செலவீடுகள்*

*என்பன இலங்கையில் கொரோனாவுக்குப் பின்னரான பொருளாதாரத்தை மென்மேலும் பாதிப்படைய செய்யும். இதனால் நாடு நிதிநெருக்கடிக்கு முகம்கொடுக்க நேரிடும்.*

*கொரோனாவினால் கண்டி மாவட்டத்தின உருவாகிய, உருவாகக் கூடிய பொருளாதார தாக்கங்கள் சிறப்பாக நோக்கப்பட வேண்டியவையாகும். கண்டி மாவட்டத்தின் பொருளாதாரம், விவசாயம், கைத்தொழல், சிறு ஏற்றுமதிப் பயிர்கள் மற்றும் சுற்றுளாத் துறை என்பவற்றில் தங்கியுள்ளது. அதிலும் கொரோனா தொற்றின் காரணமாக சுற்றுளாத் துறை சுற்றுளா துறை சார் தொழில்கள் என்பன பாதிப்புக்குள்ளானது. வாடி வீடுகள், ஹோட்டல்கள், தெருக்கடைகள் மூலம் வரும் வருமானத்தில் வாழ்பவர்கள், மற்றும் சுற்றுளா தலங்களில் பணிபுரியும் ஊழியர்கள் என பலரும் பாதிப்புக்குள்ளானார்கள்.*

- *வருமானமின்மை.*
- *உணவுப் பஞ்சம்*


ISBN: 978-624-5736-55-3

- *மனஉளைச்சல்*
- *அன்றாட வாழ்க்கை பாதிப்பு*
- *அடிப்படைத் தேவைகளை நிரைவேற்ற முடியாமை என்பன சிலவாகும்.*

***07. முடிவுரை***

*COVID 19 தொற்றின் காரணமாக இலங்கையில் கண்டி மாநகரின் சுற்றுலாத்துறை முற்று முழுதாக பாதிக்கப்பட்டுள்ள நிலையில் தேசிய ரீதியில் ஐந்து லட்சம் வேலைவாய்ப்புக்கள் பறிபோயுள்ளது.அத்துடன் நாட்டின் சுற்றுலாத்துறையின் முழுமையான முடக்கத்தினால் முதல் காலாண்டில் மாத்திரம் 319 மில்லியன் அமெரிக்க டொலர்கள் இல்லாது போயுள்ளதாக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை கூறுகின்றது. பொருளாதார வளர்ச்சி என்பது மிகவும் சவால் நிரைந்ததாக அமைந்துள்ளது. தொகை மதிப்பு புள்;ளி விபரங்கள் தரவுகளின் பிரகாரம் 2020 முதல் காலாண்டில் நாட்டின் பொருளாதரம் 1.6 சதவீதம் சரிவை பதிவுசெய்திருந்தது.*

*சுற்றுலாத்துறையுடன் தொடர்புபட்ட போக்குவரத்து, சுற்றுலா விடுதிகள் சுற்றுலா வழிகாட்டிகளின் தொழில் என்பன முழுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. COVID 19 தொற்றிலிருந்து பாதுகாப்பு பெறுவதோடு நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்கு இந்நாட்டு பிரஜை என்ற வகையில் நாம் ஒவ்வொருவரும் பங்களிப்பு செய்ய வேண்டியுள்ளது.*

***முன்மொழிவுகளும், பரிந்துரைகளும்.***

- *நாடு வழமை நிலைக்கு திரும்பிய ஜூன் மாதத்திலிருந்து சுற்றுலாத்துறையை மீள் கட்டியெழுப்புவதற்கான திட்டம் உருவாக்குதல்.*
- *பெருமளவு சுற்றுலாத்துறை ஊழியர்கள் தற்போது தமது வீடுகளில் காணப்படும் நிலையில், புதிதாக ஊழியர்களை இணைத்துக் கொள்வதனை இடைநிறுத்தம் செய்தல்.*
- *மட்டுப்படுத்தப்பட்ட அளவு பயணிகளை அனுமதித்தல்.*
- *உலக சுகாதார தாபனத்தின் வழிகாட்டல்களை பின்பற்றி அதற்கு கட்டுப்பட்டு நடந்து கொள்ள வேண்டும்.*
- *தனிமனிதன் என்ற ரீதியில் ஒவ்வொருவரும் தத்தமது ஊயிர்களை பாதுகாப்பது கடமை. எனவே உள அமைதியை மேற்கொள்வகற்காக சுற்றுலா மேற்கொள்ளும் போது தனது பாதுகாப்பை உறுதிசெய்து கொள்ள வேண்டும்.*
- *சுற்றுலா வழிகாட்டிகள் தனது பாதுகாப்பு உறுதிசெய்து கொள்ள வேண்டும்.*
- *COVID 19 தொற்று பரவலுடன் வழங்கப்பட்ட கடன்களை மீளச்செலுத்துவதற்கான காலத்தை நீடித்தல்.*
- *சுற்றுலாத்துறை ஊழியர்கள் மனம் தளராது அவர்களை ஊக்குவிப்பதற்கான நடவடிக்கைகளை மேக்கொள்ளல்.*
- *பொதுமக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தல்.*

***உசாத்துணைகள்***

Asian Development Bank. (2017). Annual Report. Colombo

Central Bank Sri Lanka., (2017), Annual Report. Colombo: Central Bank of Sri Lanka.

Ceylon Tourist Board, (2007), Tourist Report - 2007, Sri Lanka Tourist Board, Colombo.

Economic impact of COVID-19 in Sri Lanka. Retrieved from: http://www.ceylonetoday.lk. accessed on 2020.09.08.

Faulkner, B., (2001), "Towards A Framework for Tourist Disaster Management". Tourist Management 22. 135-147.

Sivesan, S., (2019). "Challenges of sustainable tourism in ancient cities a case study Based on Kandy Sri Lanka", Journal of business studies. 6 (1). http://www.google.com.

Jayawikrama. J.M.A., (2000), Sri Lanka – Tourism Economic Review Peoples Bank Colombo.

Kaleel. M.I.M., Challenges of echo-tourism and solutions: A Case study of Passikuda in eastern part of Sri Lanka, South Eastern University Arts Research Session.

*அதுல குணபால, கே., (2000), "இலங்கையின் சுற்றுலாக் கைத்தொழில்: தற்போதைய போக்குகளும் பொருளாதாரத்துக்கான பங்களிப்பும்". பொருளியல் நோக்கு, மக்கள் வங்கி வெளியீடு, இலங்கை.*

*அருண். ஆ., "சுற்றுலாத்துறை வளர்ச்சியில் இலங்கை எதிர்நோக்கி நிற்கின்ற சவால்கள்". 27, புரட்டாதி, வீரகேசரி வெளியீடு, இலங்கை.*

*துறைராஜ், குணசேகரன்., (2019), "இலங்கையில் சுற்றுலாத்துறைப் பாதிப்பு",* Retrieved from: http://www.thinakaran.lk. accessed on 2020.08.08.

*நேசமணி. எம். (2020) "நாட்டின் பொருளாதாரத்தைப் புரட்டிப் போட்டுள்ள கொரோனா".* Retrieved from: http://www.thinakaran.lk. accessed on 2020.08.08.


ISBN: 978-624-5736-55-3